**10** **ERD**

பதிவு எண். 

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

நேரம் : 1.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள் : 50

### பிரிவு – I (பகுதி – 1)

**I. பலவுள் தெரிக.** 5 x 1 = 5

1. மொழி ஞாயிறு என்று அழைக்கப்படுபவர்
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) தேவநேய பாவாணர்
இ) இளங்குமரனார் ஈ) பாரதியார்
2. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
3. "பாடு இமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்
4. சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படுபவர்அ) தமிழழகனார் ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் இ) தேவநேய பாவாணர் ஈ) இளங்குமரனார்
5. வெற்றிவேற்கை என்று அழைக்கப்படும் நூல்
அ) குறுந்தொகை ஆ) நறுந்தொகை இ) எட்டுத்தொகை ஈ) கலித்தொகை

### பகுதி – 2

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 11–வது வினா கட்டாய வினா.** 4 x 2 = 8

6. மூவகை மொழிகள் யாவை?
7. வசன கவிதை குறிப்பு வரைக.
8. புயலுக்கு இந்தியா கொடுத்துள்ள பெயர்கள் யாவை?
9. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
10. இரட்டுறமொழிதல் அணி என்றால் என்ன?
11. "முயற்சி" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – II

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி.** 3 x 3 = 9
**16–வது வினா கட்டாய வினா.**

12. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
13. "காற்றே வா" பாடலில் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

14. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

15. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

16. "சிறுதாம்பு தொடுத்த" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு மனைப்பாடலை எழுதுக.

## பிரிவு – III

**கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி.** 2 x 5 = 10

17. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக. **(அல்லது)**

மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

18. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



## பிரிவு – IV

**கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி.** 3 x 6 = 18

19. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**(அல்லது)**

முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

20. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**(அல்லது)**

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் "கோபல்லபுரத்து மக்கள்" கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

21. "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.